**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**
**C.C.No.128 /2019**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் நாள் வெள்ளி கிழமை அரசு தரப்பு சாட்சி–04, திரு.செல்வம் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கோவிந்தராஜ், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.செல்வம் | வயது | : | |
| த.பெ/ க.பெ. | : | கோவிந்தசாமி | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | LW07 / PW04 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**(எதிரி ஆஜர் இல்லை. அவர் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை:**

1) நான் சூரியமணல் கிராமத்தில் வசித்து வருகிறேன். ரகுபதி எனக்கு அண்ணன் மகன் ஆவார். எதிரி மணிமாறன் ஆனந்தவாடி ஊரைச் சேர்ந்தவர். 28.03.2019ம் தேதி இரவு 09.20 மணிக்கு, பாலுச்சாமி ஆகிய எனது அண்ணன் சைக்கிளில் கிழக்கிலிருந்து மேற்கே சென்றார். அப்போது எதிரி மணிமாறன் தனது இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கே வந்து, என் அண்ணனின் சைக்கிளை அஜாக்கிரதையாக மிகவும் வேகமாக வந்து மோதினார். அதனால், எனது அண்ணனுக்கு எதிரியின் இருசக்கர வாகனத்தில் உள்ள கைப்பிடி நெஞ்சில் குத்தி, கால், நெஞ்சு ஆகிய இடங்களில் என் அண்ணனுக்கு காயம் ஏற்பட்டது. இதை நான் நேரில் பார்த்தேன்.

2) என் அண்ணனை 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து, ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, பின்னர் மேல்சிகிச்சைக்காக தஞ்சை மீனாட்சி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அன்றைய தினமே இரவு 01.00 மணிக்கு எனது அண்ணன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள். வழக்கு குறித்து அவரின் மகன் அசா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** – எதிரி தரப்பில் வழக்கறிஞர் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**உண்மை நகல்/**

ஒம்/–S.தனலெட்சுமி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 (மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.